செ.வெ.எண்.44 நாள்: 25.01.2018.

திருநெல்வேலியில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி மற்றும் மனித சங்கிலியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும், புதிய வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்கினார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில், தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினையும், தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி மற்றும் மனித சங்கிலியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.01.2018) தொடங்கி வைத்தார். மேலும், திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்தில் மகளிர் திட்ட அலுவலகம் மற்றும் தேர்தல் பிரிவு சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் வாக்காளர் விழிப்புணர்வு வண்ண கோலம் வரைந்துள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, புனித ஜான்ஸ் கல்லூரியில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையொப்பமிட்டு துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, புனித ஜான்ஸ் கல்லூரியில் வாக்காளர் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

வாக்காளர் தினம் கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கம். வாக்குரிமை ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும். உலகின் பல்வேறு நாடுகளில் வாக்குரிமை பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு தான் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தான் சுதந்திரம் பெற்றவுடன் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. உங்களது உரிமைகளுக்காக போராடும் நீங்கள் மாற்றம் கொண்டு வரும் முக்கியமான வாக்குரிமையின் அடிப்படையில், வாக்களித்து சரியான நபரினை தேர்வு செய்திட வேண்டும். சாதி, மதம், மொழி, பணம் என எந்த எதிர்பார்ப்பும் இன்றி வாக்களிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் 18 வயது பூர்த்தியடைந்தவர்களை சேர்த்து, புதிய வாக்காளர் பட்டியல் ஜனவரி மாதம் வெளியிடப்படுகிறது. புதிதாக சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு இன்று வண்ண வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. மேலும், தேசிய வாக்களார் தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நமது மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும், பள்ளி, கல்லூரிகளிலும் நடத்தப்படுகிறது. பல்வேறு போட்டிகளும் நடத்தப்படுகிறது. அனைவரும் அனைத்த தேர்தல்களிலும் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமை ஆற்றிட வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில் சிறப்பு சுருக்கமுறை திருத்த பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். வாக்காளர் விழிப்புணர்வு பணிகளில் சிறப்பாக ஒத்துழைப்பு அளித்த பள்ளி, கல்லூரிகளுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.விஜயகுமார், மகளிர் திட்டம், திட்ட அலுவலர் திருமதி.ஹெட்சி லீமா அமலினி, தேர்தல் வட்டாட்சியர் திரு.சிவகுமார், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், தேர்தல் வட்டாட்சியர் திரு.பாபு உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.